S.R. Eashwaree.
Hindu College
Manipay.

உ

சிவமயம்

வாலாம்பிகை துணை



# நவராத்திரி வெண்பா

★

ஸ்ரீ வண்ணை வாலாம்பிகை திருவடிக்கு

## அன்புச் சமர்ப்பணம்

சமர்ப்பித்தவர்
அ. துரைரத்தினம்
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)
அராலி மேற்கு — வட்டுக்கோட்டை.

★

பதிப்புரிமை ஆசிரியர்க்குரியது.

8—10—53.

கிடைக்கும் இடம்:- ஸ்ரீ வண்ணை வைத்தீஸ்வர தேவாலயம்

R. Eashwary.
"Eashwarollagam"
Manipay

உ

சிவமயம்

# வாலாம்பிகை துணை

அன்றே என்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமுங்
குன்றே அனையாய் என்னை ஆட் கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண் டோ எண்தோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

மாணிக்கவாசக சுவாமிகள்.

உ
சிவமயம்

## வாலாம்பிகை துணை

# நவராத்திரி வெண்பா.

---

**காந்தமிலா தெல்லீந்த காரிகையே** நின்னருளை
மாந்துவதற் காசையுற்றேன் வாலையம்மை—சாந்தமுள
சீர்காழிக் கோமகனார் தேர்ஞான மாயுண்ட
வார்முலைப்பால் என்வாயில் வார். 1.

மாதரசை மாதாவை மாதேவன் சுந்தரியைப்
போதரசை நாமகளைப் போற்றுவேன்—போதவொளி
உள்ளத்தின் உள்ளே ஒளிசெய்து வீடுய்க்கக்
கள்ளத்தை எள்ளுவேன் காசு. 2.

ஒட்டியாணம் மேவி ஒளிசெய்யக் கட்டியநல்
அட்டிகையும் பொட்டணியும் ஆர்ப்பொட்டும்—மட்டார்
மலரிண்டை மூக்குத்தி மார்ப்பதக்கம் மின்ன
அலரடியே சிந்திப்பேன் ஆழ்ந்து. 3.

துள்ளித் திரிகின்ற தூநவ்விக் கண்ணளைத்
துள்ளித் திரியாது தூக்குவேன்—துள்ளிமிக
என்நாவில் எந்நாளும் இன்பாடல் துள்ளுதற்குத்
தன்தாளை வைத்தாளே தாய். 4

தாய்போன்ற நல்லாளின் தாயில் இனியவளின்
தாய்ப்பாதம் என்னகத்தே தாங்கினேன்—தாய்மேல்
மனமுருகிப் பாடறனை வாழ்த்தாகப் பாடி
மனமுவக்க வந்திருந்தாள் மாது. 5.

உன்னம் உருக உவந்தருளி வந்தாளை
உன்னத் திருத்தி உயர்முத்தம்—உன்னருந்
தாளிலிட்டுத் தாயாகத் தாங்குகின்றேன் தாரணியீர்
தாளிலடை வாலைதா சன். 6.

வெள்ளியங்கி தாங்கி வெளிப்பட்டு நிற்கின்ற
கள்ளியங்கங் காதலுடன் காண்பதற்கு—வெள்ளிடையாய்
வெண்பாவை யான்பாட வேலவனை ஈன்றவளே
கண்பார்த்துக் காதலருள் காட்டு. 7.

சுட்டிச் சிரசுடனே துள்ளுகின்ற தையலாள்
எட்டியென் நாவில் இருந்தருளக்—கட்டிமிகப்
பாடலையும் பாடிப் பரவசமாய்ப் பேணுவேன்
பாடலஞ்சேர் மென்மைப் பதம். 8.

சதங்கையொலி கேட்கவே தாளிணைகள் காட்டிச்
சதங்கையணி சண்முகரைத் தந்த—மதங்கமொப்ப
என்நாவை ஏவுகின்றாள் எந்நாளும் பாடுதற்குப்
பன்னகை ஆபரணர் பங்கு. 9.

கண்கள் இரண்டுங் களிப்புடனே காண்பதற்கு
மண்ணின் மிகந்த மலர்த்தாளை—எண்ணியெண்ணிப்
பண்ணமையப் பாமாலை பாடுவேன் கஞ்சமாய்க்
கிண்கிணிசேர் தாளொலியைக் கேட்டு. 10.

வணிகர் மகளணிந்த வைரமூக் குத்தி
அணியத் துலைகாட்டும் அம்மை—பணியணி
வேணியார் உள்ளத்தில் வேட்டருளுந் தேவியே
பாணியால் தீர்ப்பாய் பயம். 11.

அன்னை தந்தை பத்தியோ டாசிரிய பத்திசேர்
மன்னவரும் முன்னவரும் வாழ்த்தவே—உன்னருளை
அள்ளியள்ளி ஈந்திடுவாய் அன்புடனே பெற்றய்ய
வள்ளிமண வாளனைய் வாழ்ந்து. 12.

சன்மார்க்கன் என்றென்னைத் தாரணியார் போற்றி
[செய்ய
என்மார்க்கம் உய்ந்நெறியில் ஏகவே—என்னிறைவி
நற்சுகமும் நற்கலையும் நல்லறிவும் நற்பொருளும்
நற்குணமும் வாலையம்மை நல்கு. 13.

ஈகைமிகு வாய்மை இரக்கமுடன் அன்பருளுந்
தோகைபயில் பெம்மான் தொழுபத்தி—சாகைவரை
நன்றிமற வாமையாம் நற்குணங்கள் ஒவ்வொன்றும்
ஒன்றியே யான்வாழ ஓம்பு. 14.

தென்கைலை யான திருப்பதியில் மேவுகின்ற
மின்கௌரி எக்கணமும் வீற்றிருப்பாள்—என்நா
அகமதனிற் சத்திதனை ஆக்குதற்குச் செம்மைப்
பகவதியின் நோன்றாளைப் பாடு. 15.

அங்கைமலர் கொண்டே அருச்சனைகள் செய்துநாட்
பங்கயக்கை பார்த்துப் பரவியே—செங்கமலப்
பொன்னையுன்னிற் கண்டு பொருளெல்லாம் பெற்றுய்ய
அன்னைவரம் ஈவாய் அலர்ந்து. 16.

வண்டு மயங்கும் வடிவான வாண்முகத்தே
ஒண்கண் மலர்மாதா உன்கலையாம்—வெண்பூக்
கலைமகளை விஞ்சு கலையெல்லாங் கேட்டேன்
மலைமகளே ஈவாய் மலர்ந்து. 17.

கண்மூன் றுடையான் கனவரைத்தோள் சேருகின்ற
கண்ணீண் டுடையவளே காமாட்சி—கண்ணோக்கால்
பாலகரை ஈன்றவளே பாலகரைக் காத்திடுவீர்
சீலமுடன் நற்றாளைச் சேர்த்து. 18.

சதியைச் சதிசெய் சதியே சதிநாள்
பதியப் பதியும் பதியே—விதியீ
விதியே சதியே விதியும் விதியும்
விதியே சதியே விதி. 19.

பாண்டியனின் புத்திரியாம் பாவையே இன்றென்னை
ஆண்டருள வேண்டுகின்றேன் ஆதியன்னை—காண்பரிய
சோதிப் பிழம்பாகிச் சுந்தரற்குத் தூதானன்
பாதிப் பிழம்பே பதி. 20.

நாந்தகம்போற் கண்ணுடைய நாயகியே உன்னருகே
நாந்தகவேற் கந்தனையும் நாதனையும்—ஏந்துவிடை
மேலாகக் காட்டியே வீட்டுநெறி உய்த்திடுவாய்
மாலாழ வேண்டுவேன் வாழ்வு. 21.

விதித்தனவே செய்து விலக்கியன நீக்கிக்
கதிப்பதவி யான்மேவக் கைலை—மதிச்சடையான்
உள்ளிருத்தித் தையலே உள்ளிருப்பாய் உன்னடியார்
நள்ளிருக்க வேண்டுகின்றேன் நான். 22.

**ஓதமுள்ள வேலையிலே ஓடத்தே சென்றமின்**
**மாதரணி சோலையிலே வைத்தவதி—பாதகரை**
**ஐயமின்றிக் கட்டியே அக்கரையிற் கொண்டுசெல்லச்**
**செய்யவரம் ஈந்தவளே சேர்.** 23.

வாலாம் பிகையுன் வனமுலையி னின்றொழுகும்
பாலா ரமிர்தம் பருகியே—நாலாறு
வெண்பாவை ஓதியே வேண்டினவன் சந்ததிநாப்
பண்பாவை ஓதப் பதி. 24.

## சமர்ப்பணம்

கண்ணப் பனுதி யான கணக்கிலா
அடியர் குற்றம்
வண்ணப் பண்பென் னுமையன் வாமமா
யமையு மம்மை
உண்ணெக் கியுருகி யானும் உவந்துசொல்
பாடல் தன்னைப்
பண்ணெக் குமென்றே யேற்பாய் பாலர்
சொல்லேற் குமன்னை. 25.

நால்வரும் வணங்கி யேத்தி நவையிலாப்
பாடல் சொல்ல
மால்முதற் றேவர் பூசை மனமுவந்
தேற்கு நிற்கு
நூல்தெரி யாத யான்நின் நூபுரத்
தாள்க ளுன்னிப்
பால்குடி மதலை போலப் பாடிய
பாட லென்னே! 26.

பாலருக் குணர்த்து மாசான் பற்றினை
வளர்த்தற் காகச்
சீலமிக் கெடுத்துச் சொல்லிச் சிறுமையை
யொழித்தல் போல
ஆலமிக் குண்டு வானோர்க் கமிர்தமீ
வள்ளல் வாலை
ஏலமிப் பாடல் கொள்ள ஏற்றருள்
புரிவாய் தாயே. 27.

வாலாம்பிகை திருவடி வாழ்க!

———:○:———

1-ம், 11-ம், 23-ம் செய்யுட்கள்
அம்பாளின் அற்புதங்களைக் குறிக்கும்.

" ஸ்ரீ சண்முகநாத அச்சகம் "

யாழ்ப்பாணம்.